மக்கள் குரல்
நடுநிலை நாளேடு

**January 22, 2019**

# ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரி சார்பில் 'பிளாஸ்டிக்' விழிப்புணர்வு பிரச்சாரம்

சென்னை, ஜன. 22–

ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரி மாணவிகள் பங்கேற்ற, 'ஸ்டாப்' என்னும் 'பிளாஸ்டிக்' விழிப்புணர்வு பிரச்சார நிகழ்ச்சி தொடங்கப்பட்டது.

ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியின் மக்கள் தொடர்புத் துறை மாணவிகள் சார்பில் 'ஸ்டாப்' (stop) 'பிளாஸ்டிக் இல்லாத நிலையை நோக்கி நகர்வோம்' என்னும் தலைப்பிலான விழிப்புணர்வு பிரச்சாரத்தை நேற்று தொடங்கியது. இந்த நிகழ்ச்சியில், கல்லூரியின் துணை முதல்வர்கள் முன்னிலையில், பேட்டர்சன் எனர்ஜி இயக்குநர் வித்யா அமர்நாத் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர் நித்யானந்த் ஜெயராமன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றி தொடங்கி வைத்தனர்.



**'ஸ்டாப்' நோக்கங்கள்**

'ஸ்டாப்' என்ற தலைப்பிலான விழிப்புணர்வு பிரச்சாரத்தின் நோக்கங்களாக, தமிழ்நாட்டில் அமல்படுத்தப்பட்டுள்ள பிளாஸ்டிக் தடையை அனைவரிடமும் வலியுறுத்துவது என்றும், ஒரு முறைப் பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருள்களால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவது என்றும், பிளாஸ்டிக் கழிவுகளை தனியாக பிரித்து அகற்றுவது பற்றி மக்களிடையே எடுத்துரைப்பது மற்றும் பிளாஸ்டிக் பொருள்களுக்கு மாற்றாக, அன்றாட வாழ்வில் மாற்றுப் பொருள்களை பயன்படுத்த பரிந்துரை செய்வது ஆகிய நோக்கங்களை எடுத்துரைத்தனர்.

இந்த விழிப்புணர்வு நோக்கத்தை கருத்தில் கொண்டு, லயோலா கல்லூரி மாணவிகள், சென்னையில் உள்ள பல்வேறு பள்ளிகள், கல்லூரிகள், மற்றும் மக்கள் கூடும் பொது இடங்களில் ஆவணப்படம், போட்டிகள், 'பிளாஷ் மாப்' (flash mob) போன்ற நிகழ்ச்சிகள் மூலம் மக்களிடையே பிளாஸ்டிக் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த உள்ளதாக தெரிவித்தனர்.